மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 124/2017

பெயர் : பழனிசாமி
சாட்சி – வா.சா–1 நாள்: 17.02.2025

---

**குறுக்கு விசாரணை (1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு)**

1. என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தடம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதிலும் நான் வழக்குரையில் சொல்லி உள்ளவாறு, எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளவாறு க.ச.62 காலையில் 16 அடி அகலம் உள்ள வண்டி பாதை உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பாதை உள்ளதாக நான் சொல்லும் 6.10.1924 தேதியிட்ட வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சொல்லும் தடம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது கொள்ளு தாத்தா பழனி கவுண்டருக்கு ஏ–பாக சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் கொள்ளு தாத்தா பழனி கவுண்டருக்கு ஏ–பாக சொத்தில் மேற்படி க.ச.எண் .61 காலையில் 1 ஏக்கர் 15 சென்ட் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தான் தாவா 1வது ஆயிட்ட சொத்து என்றாலும் சரிதான். க.ச.62 காலையில் பொதுவாக 10 சென்ட் என்றும் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.62 காலையில் பொதுவாக 10 சென்ட் என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் எந்த கோட்டில் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. க.ச.62 காலையில் மத்த பாகஸ்தர்களான மீதமுள்ள 12.24 ஏக்கர் பரப்பளவிற்க்கு உரியவர்களுடன் நான் எனது 10 சென்ட் குறித்து எந்த பாகப்பிரிவினையும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது கொள்ளு தாத்தா பழனிக்கவுண்டரின் சகோதரர் சின்னியகவுண்டருக்கு வா.சா.ஆ.4

பாகப்பிரிவினை பத்திரத்தில் க.ச.62 காலையில் 4 ஏக்கர் 1 செண்ட் பூமி பி பாக சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. சின்னியகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட 4 ஏக்கர் 1 சென்ட் பூமியில் பிஏபி வாய்க்காலுக்காக ஒரு பகுதி அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ளது என்றால் சரிதான். பி ஏ பி வாய்க்காலுக்கு வடபுறம் கிழமேலாக உள்ள சொத்தை சின்னியகவுண்டரின் வாரிசுகள் அவர்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. 29.10.1929 தேதியிட்ட வா.சா.ஆ. 5 பாகப்பிரிவினை பத்திரத்தில், மொத்தம் 10 பேர் பாகஸ்தராக உள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த தரப்பினர் எங்களது கொள்ளு தாத்தா பழனி கவுண்டர் என்றால் யார் யார் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்தில் க.ச.62 காலையில் தடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 2 சென்ட் அளவிற்கு தான் உள்ளது என்றும் அந்த பாகமானது பழனியக்காள் என்பவருக்கு தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. 29.10.1929 தேதியிட்ட வா.சா.ஆ. 5 பாகப்பிரிவினை பத்திரத்தில் 8, 9 லக்கமிட்ட கருணையம்மாள் மற்றும் இராமன கவுண்டர் மகன் பழனிக்கவுண்டர் க.ச.62 காலையில் தென்புறம் கிழமேற்கில் ஏக்கர் 10 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 10 செண்ட் தான் தடம் என்றும், அந்த தடம் தான் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

7. வா.சா.ஆ.3 09.08.1963 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கும் அவரது சகோதரர் நாச்சிமுத்து கவுண்டரின் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகசாசனப் பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தாத்தா இராமசாமி கவுண்டருக்கு ஏ–பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் க.ச.62 காலையில் பொதுவில் 10 செண்ட் என்று மட்டும் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. 25.10.1982 தேதியில் இராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பாகத்தினை பொறுத்து 2 வது வாதியான எனது அப்பா சுப்பையன் மற்றும் அவரது சகோதரர்கள் வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது அப்பா சுப்பையனுக்கு சி–பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது அப்பாவிற்கு

ஒதுக்கப்பட்ட பாகத்தில் க.ச.62 காலையில் இருந்து க.ச.61 காலை வரை போகும் பொது வண்டித்தடம் 10 செண்ட்டில் பொதுவில் 5 செண்ட் என்று வாசகத்தை புதிதாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான்.

9. எனது தாத்தா மற்றும் கொள்ளு தாத்தா ஆகியோர் தரப்பினராக இருந்து செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரங்களில் க.ச.62 காலையில் பொதுவில் 10 செண்ட் என்று மட்டும் தான் குறிப்பிட்டார்கள் என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு 19.10.2016 தேதியில் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் பின்னும் க.ச.62 நெ.காலை பு.ஏ.12.34 க்குத் தரம் ரூ.10.0 இதில் பொதுவில் பு.ஏ.0.10 இதில் பொதுவில் பாதி பு.ஏ.0.05 க்குத் தரம் ரூ.0.04 இதில் ஷை காலையில் மேற்கோட்டில் வடக்கிலிருந்து க.ச.61 நெ.காலை செல்லும் தென்வடல் தடத்திற்கு பு.ஏ.0.02 ம் பின்னும் உட்பிரிவின்படி க.ச.62/3 நெ. காலையில் தடத்திற்காக பு.ஏ.0.01 ம். ஆக ஒட்டு பு.ஹெ.0.01.2 அதாவது பு.ஏ.0.03 க்குத் தரம் ரூ.0.02. என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் முந்தைய பத்திரங்கள் எதிலும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். மூல பத்திரங்களில் இல்லாததை இருப்பதாக நானும் எனது அப்பாவும் செய்து கொண்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் கற்பனையாக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லி உள்ள சொத்து விவரங்கள் தற்போது வரை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியில்ல. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பாத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் பிரதிவாதிகளை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில், க.ச.62 காலையில் மேற்கோட்டில் வாய்க்கால் போன்ற பள்ளம் செல்கிறது என்பதை மறைத்து நான் க.ச.61 காலையில் செல்கிறது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் க.ச.61 காலைக்கு உண்டானது என்றால் சரிதான். அதில் க.ச.61 காலையில் நான் சொல்லும் வாய்க்கால் போன்ற பள்ளம் எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ( **க.ச.61 காலைக்கு உண்டான புல வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் க.ச.62 காலைக்கு உண்டானது என்றால் சரிதான். அதில் க.ச.62 காலையில் நான் சொல்லும் மேற்கோட்டில் வாய்க்கால் போன்ற பள்ளம்

செல்கிறது என்பதை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ( **க.ச.62 காலைக்கு உண்டான புல வரைபடம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

12. நான் சொல்வது போல் க.ச.62 காலையில் எங்கள் பூமிக்கு செல்வதற்கு 16 அடி அகல தடம் எதுவும் கிடையாது என்றால் தற்போது இல்லை முன்பு இருந்ததை அடைத்துவிட்டார்கள். க.ச.62 காலையில் மேல்கோட்டில் பள்ளத்தை ஒட்டி கிழபுறமாக பிரதிவாதிகள் தென்னை மரம் வைத்துள்ளார்கள் என்றால் க.ச.61ல் தான் வைத்துள்ளார்கள். தென்னை மரம் 30 அடி உயரம் இருக்கும் என்றால் இருக்கும். க.ச.61 காலையில் தான் வாய்க்கால் போன்ற பள்ளம் மற்றும் தென்னை மரங்கள் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்ற ஆணையரை நியமித்து அளந்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.02.17 19:12:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.